1982 பிப்ரவரி 11]

திரு. கோவைத்தம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரிய வைத்திய பார்மஸி என்ற நிறுவனம் உலகத்திலேயே புகழ்பெற்ற நிறுவனம் என்பதையும், அதன் தலைமை கேரளாவிலிருந்து கோவைக்கு, அதாவது தமிழ்நாட்டிற்கு வந்திருக்கிறது என்பதையும் கருத்திற் கொண்டு, அந்தக் கல்லூரிக்கு உதவி கொடுப்பது என்பது தமிழக அரசானது தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் செய்யக்கூடிய பாக்கியம் என்று கருதி அமைச்சரவர்கள் அதிக உதவியைச் செய்து அந்தக் கல்லூரியை ஊக்குவிப்பார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த நிறுவனம் ஏதாவது திட்டவட்டமாக இப்படிப்பட்ட உதவி தேவை என்று நம்மிடத்தில் அணுகுவார்களேயானால் அதைப்பற்றி நிச்சயமாக அரசாங்கம் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூகலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்.

*வினா எண். 152— திரு. கு. அ. செங்கோட்டையன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கூகலூரில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) கூகலூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு சமீபத்தில் ஆணை பிறப்பித்துள்ளது.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்காக ஆணை பிறப்பித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆரம்ப சுகாதார நிலையத்தை அங்கே அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்ற ஆண்டு 20 ஆரம்ப சுகாதார நிலையங்களைப் புதிதாகத் துவக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்து அதற்காக

The Government sanctioned a total expenditure of Rs. 17·28 lakhs unde recuring and Rs. 96.49 lakhs under non-recurring The total expenditure of the Scheme for 1981-82 has been restricted to 71·19 lakhs.

ஒட்டுமொத்தமாக 20 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் அந்தத் தொகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு எவ்வளவு தொகை வேண்டுமோ அதை ப்ரப்போர்ஷனேட்டாக செலவழிக்க அரசாங்கம் தயாராக இருக்கும்.

திரு. ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டமான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு சுகாதார நிலையத்திற்கும் மற்றொரு சுகாதார நிலையத்திற்கும் இவ்வளவு தூரம் இருக்க வேண்டுமென்று சட்டம் வைக்கப்பட்டிருக்கிறது. அதனால் சில யிடங்களிலே கொஞ்சம் கஷ்டமாக இருக்கின்ற காரணத்தினால் அந்தச் சட்டத்தை மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வ. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மருத்துவ மனைக்கும் இன்னொரு மருத்துவ மனைக்கும் 8 கிலோ மீட்டர் அல்லது 5 மைல் இருக்க வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். ஆரம்ப சுகாதார நிலையங்களைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு பஞ்சாயத்து ஒன்றியத்திற்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று வருகிறது. சென்ற ஆண்டு 20 ஆரம்ப சுகாதார நிலையங்களை ஜாஸ்தியாக அமைப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம். நம்முடைய இறுதி இலட்சியம் என்னவென்றால், ஒரு ஒன்றியத்தில் ஒரு இலட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் போதாது ; 50,000 பேர்களுக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்று கொண்டு வர வேண்டுமென்பது இறுதி இலட்சியம். இருந்தாலும் படிப்படியாகத்தான் இதைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் நேரத்தில் இந்த விதி விலக்கு தர வேண்டியிருக்கும். நிச்சயமாக அதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல விதி விலக்கு தேவைப்படும் இடங்களில் அதுபற்றி நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு .அ. செங்கோட்டையன் : பேரவைத் தலைவரவர்களே, அந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டிடம் கட்டுவதற்கான நில ஆர்ஜிதம் முடிந்துவிட்டதா ? எப்பொழுது கட்டிடம் கட்டப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒரு ஆண்டுக்குள்ளே கட்டி முடித்து விடப்படும்.